# பிரேம வாஹினி

## பகவான்
## ஸ்ரீ சத்ய சாயி பாபா

65. Help Ever, Hurt Never

## எப்பொழுதும் உதவி செய், ஒருபோதும் துன்புறுத்தாதே

எந்த உயிருக்கும் துன்பம் நேராவண்ணம் ஒவ்வொருவரும் வாழ வேண்டும். இது ஒவ்வொருவருக்குமுரிய உயர்வான கடமையாகும். அத்துடன் தனது ஆற்றலின் ஒரு பகுதியை அவ்வப்போது வழிபாடு, இடைவிடாமல் இறை நாமத்தை உச்சரித்தல், த்யானம் முதலியவற்றிற்கு ஒதுக்குவது பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றவரின் முதன்மையான கடமையாகும்; அத்துடன் சத்தியம், தர்மம், சாந்தி, மற்றவர்க்கு நன்மை நல்கும் சேவையுடன் வாழும் வகையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நெருப்பைத் தொடவும், பாம்பைத் தொந்தரவு செய்யவும் ஒருவர் பயப்படுவதைப் போல, பிறர்க்குத் தீமை பயக்கும் செயல்களையும், பாபச்செயல்களையும் செய்ய அஞ்ச வேண்டும். தங்கத்தையும், சொத்துக்களையும் பெருக்குவதில் காட்டும் ஈடுபாட்டையும் பற்றையும் பிறர்க்கு மகிழ்ச்சி அளிப்பதிலும், நற்செயல்கள் செய்வதிலும் இறைவழிபாட்டிலும் காட்ட வேண்டும். இதுதான் மனித தர்மம்.

**66. The Lord incarnates to promote goodness and universality**

## நன்மை மற்றும் ஒற்றுமையை மேம்படுத்த இறைவன் அவதரிக்கிறார்

இப்படிப்பட்ட தன்மையை வலுப்படுத்தவே இறைவன் மானிட வடிவம் தாங்கி அவதரிக்கிறார். ஆனால் இல்லாத ஒன்றை எப்படி வலுப்படுத்துவது. வளர்ப்பது? எனும் வினா எழலாம். உள்ளபடியே இவ்வியல்புகள் இல்லாதவைகள்தான்; ஆனால் அவைகள் மனிதனிடம் உள்ளன! இருப்பில் உள்ள இந்த இயல்புகள் தேய்ந்து மறையும்போது அவற்றை மேம்படுத்தவும் எதிர்த்து வேலை செய்த சக்திகளை ஒழிக்கவும் இறைவன் வருகிறார். இந்தச் செயலைத் தெளிவுபடுத்தவே துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குப் பின்வருமாறு போதித்தார்:

**" பரித்ரானாய சாது நாம் விநாசாயச்ச துஷ்க்ருதாம்**
**தர்ம சம்ஸ்தாபனார்த்தாயா சம்பவாமி யுகே யுகே"**

இதில் இறைவன் எடுக்கும் அவதாரங்கள் அனைத்தும் சாதுக்களைக் காக்கவும் மேம்படுத்தவும்தான்! எனும் கருத்து அடங்கியுள்ளது. சாது எனும் இச்சொல் ஒரு சாதி, சமயம் அல்லது சமுதாயம், குடும்பம் அல்லது வாழ்க்கைத்தரம் அல்லது மனிதனைப் போன்ற ஓர் உயிரை சுட்டுவதல்ல! அது அனைத்துச் சமயங்களையும், எல்லா வாழ்க்கை நிலைகளையும், எல்லா இனங்களையும்

எல்லா உயிர்களையும் குறிப்பது. இறைவன் கீதையில் தனது பிரபஞ்ச மனதை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தப் பிரபஞ்சம் தழுவிய செய்தி காரணமாகவே கீதை இத்துணை புகழும் சாரமும் மிக்கதாகத் திகழ்கிறது. " நான் பக்தர்களுக்குக் கடமை உணர்வுமிக்க சேவகன் " என்று ஏன் ஸ்ரீ கிருஷ்ணன் எண்ணற்ற சந்தர்ப்பங்களிலும் இடங்களிலும் பிரகடனப்படுத்த வேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருக்க சம்மதித்ததைக் குறிப்பிடலாம்.

ஒரு சாதாரண மனிதனின் பண்பாடே இப்படி உயர்கிறதெனில் இடைவிடா இறைச்சிந்தனையுடன் ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டிருப்போரின் பண்பாடு எத்தனைப் புனிதமானதாக இருக்கும்? எந்த அளவிற்குத் தூய்மையாக இருக்கும்? என்பதை ஒருவர் தானாகவே முடிவு செய்ய இயலும். இந்த இருவிதமான மனிதர்களுக்கும் நடத்தையின் இயல்பு இன்றியமையா அம்சமாகும்.

**67, Follow the sages of yore in contemplation of Brahman**

### ப்ரம்ம தியானிகளை பின் தொடருங்கள்

பண்டைய பிரம்ம தியானிகளுக்கும் (நிஷ்டை) இன்றைய ப்ரம்ம தியானிகளுக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது. முதலில் பிரம்ம நிஷ்டையின் சிறப்பைத் தெரிந்து கொள்வது அவசியம். இன்றைய புனிதமான மனிதர்கள் இதைச் செய்யாததால்தான் வறுமை நம்மை ஆட்கொண்டிருக்கிறது.

கடந்த காலத்தில் இதன் சிறப்பு உணரப்பட்டிருந்தது. அவர்கள் புனிதத்தை அனுபவிப்பதில் ஆழ்ந்திருந்தனர். அப்படிப்பட்ட புனித உணர்வு இப்போது ஏன் எழவில்லை? எனும் வினா எழலாம்; ஆனால் அவைகள் இல்லாமலில்லை. நெருப்புக் கொழுந்து விடவும் தணியவும் காரணமானது எரிபொருள்; இதைத்தவிர வேறு காரணம் இல்லை. எரிபொருள் அதிகமாக இருப்பின் நெருப்பு சுடர்விட்டு எரியும்! ஒவ்வொரு தனி நபருக்கும் எரிபொருள் உதவியுடன் அவனுடைய நெருப்பை வளர்ப்பதற்கு உரிமை இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஒளி அருளும் ஆற்றல் நெருப்புக்கு உண்டு. அதன் இயல்பே அதுதான். அதைப்போலவே சாதகர் தன் புத்தி எனும் நெருப்பில் (ஞானம் எனும் ஒளியை உருவாக்கும் நெருப்பு) துறவு, சாந்தம், சத்தியம், அன்பு, சகிப்புத்தன்மை, தன்னலமற்ற சேவை முதலிய எரிபொருட்களை இடைவிடாமல் வைக்க வேண்டும்; அவற்றை அதிகமாக வைக்க வைக்க சாதகர் ஆற்றல் மிக்கவராகவும் ஒளிமயமானவராகவும் மாறுவார்.

வளமான மண்ணில் உள்ள மரங்கள்தான் நல்ல கனிகளை நல்கும். சாரமற்ற மண்ணில் மகசூல் மோசமாக இருக்கும். அதைப் போலவே மாசுபடாத

இதயங்களில் தான் அப்படிப்பட்ட புனிதமான உணர்வுகளும் ஆற்றலும் வெகுமதியும் ஒளியுடன் மிளிரும்.

பண்டைய பிரம்ம தியானிகளுக்கும் இன்றைய பிரம்ம தியானிகளுக்கும் உள்ள வேறுபாடு இதுதான். இன்றைய தியானிகளும் கடந்த காலத்தில் செய்ததைப் போலவே அதே தியானத்தையும் பிரணவத்தையும்தான் செய்துகொண்டிருக்கின்றனர்; ஆனால் பெயரளவில் செய்கிறார்கள். சாதனைக்குச் சுயக்கட்டுப்பாடு தேவை; இன்று அது வீழ்ச்சி அடைந்து விட்டது; இதுதான் வேறுபாடு.

தனி இடங்களில் அமர்ந்து இறை தியானத்தில் ஒன்றி ஆழ்ந்துபோன மகான்களின் எண்ணிக்கை குறையும்போது பலவகைத் துன்பங்கள் உலகில் நேர்கின்றன. இன்றைய பிரம்ம தியானிகள் அற்பமான பெயருக்கும், புகழுக்கும் அடிமையாகி, மோகத்தில் மூழ்கி, புகழையும் தங்கள் நிறுவனங்களையும் நீடிக்க ஓய்வில்லாமல் உழைத்து தங்கள் சாதனைகளுக்குரிய தடைகளை ஏராளமாகக் குவித்து விடுகிறார்கள்.

**68. seek Solitude, Meditate and acquire one-pointedness**

## தனி இடம், தியானம், ஒருமை மனம் தேவை

பிரம்ம நிஷ்டையில் வேரூன்ற விரும்புபவர்கள் தனி இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் தியானமும், ஜபமும் செய்ய வேண்டும்; இந்த ஆன்மப் பயிற்சிகள் மூலம் ஒருமை மனம் அடைய முடியும்; படைக்கப்பட்ட உயிரினம் அனைத்துக்கும் நலம் நல்கும் செயல்களைச் செய்ய எப்போதும் ஆர்வம் கொள்ள வேண்டும்; முடிவைப் பற்றிக் கவலைப்படாமல் எப்போதும் செயல்பட்டவண்ணம் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட மனிதர்கள் பெருகும்போதுதான் உலகின் துயரமனைத்தும் விலகும். இதுதான் க்ருத யுகத்திற்குரிய அடையாளம்.

உலகில் இளகிய இதயம் கொண்ட மருத்துவர்கள் இங்குமங்கும் மருத்துவ நிறுவனங்களை நடத்துவதைப் போல, நோயுற்றவர்களுக்கும், பாதிக்கப்படவர்களுக்கும் சிகிச்சையளித்து சேவை செய்வதைப்போல பிறப்பு, இறப்பு நோயைக் குணப்படுத்தும் நிபுணர்களான புனிதமானவர்களின் ஆஸ்ரமங்களும் இங்குமங்கும் இருக்குமாகில் அறியாமை, பொய்மை, ஒழுக்கமின்மை, தற்பெருமை முதலியவை மக்களைத் தொற்றாதவண்ணம் குணப்படுத்தி விடமுடியும். அறியாமையால் தீமை பிறக்கிறது. அதை பிரம்மஞானம் எனும் மருந்தால் மட்டுமே குணப்படுத்த முடியும்; அத்துடன் அமைதி, நெஞ்சுரம், சுயக்கட்டுப்பாடு (சாந்தம், சாமம், தாமம்) முதலிய துணைமருந்துகளையும் பயன்படுத்த வேண்டும்.

இப்படிச் செய்வதற்கு பதிலாக இன்றைய பெரியவர்கள், நோயாளி கூறுவதற்கேற்ப அவர் விரும்பும் மருந்துகளை அளிக்கிறார்கள்; அவர்கள் இதன் மூலம் அந்த நோயாளிகளின் கருவிகள் ஆகிவிடுகின்றனர். பெயர், புகழுக்காக நோயாளிகள் வரையறுக்கும் மருந்தை ஏற்கும் மருத்துவர்களைப் போல் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். தங்களுடைய பலவீனம், முட்டாள்தனம் காரணமாக, பெயர், புகழ் எனும் பேராசைப் பேய்களுக்கு இரையாகி, ஆனந்தத்தை தாங்கள் சுவைத்துப் பார்க்கும் முன்பே பெரியவர்கள் என அழைக்கபடுபவர்கள் நரகத்தில் வீழ்ந்து விடுகிறார்கள். தற்காலத்தில் நிலவும் இந்த வறுமைக்கு முக்கிய காரணம் இதுதான். இன்றைய சாதுக்களும், மகான்களும் இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில்லை; அதன்படி செயல்படுவதும் இல்லை.

அந்தப் புனிதமான சாரம் அனுபவித்து உணரப்பட வேண்டிய ஒன்று. அதற்கு சுயநலத் தேவைகளைத் தியாகம் செய்தாக வேண்டும். பிறருக்கு நன்மை செய்யும் இடைவிடா முயற்சி அதில் இருக்க வேண்டும். உலகின் நலனை நிலை நிறுத்துவதே ஒருவரின் ஆசையாக இருக்க வேண்டும். இந்த இயல்புகள் அனைத்தும் நிரம்பிய இதயத்துடன் ஒருவர் இறைவனைத் தியானிக்க வேண்டும். இதுதான் சரியான வழி. பெரிய மனிதர்களும் அதிகாரிகளும் மனித சமுதாய சேவையில் இப்படி ஈடுபடுவார்களாகில், உலக நலனை மேம்படுத்துவார்களாகில், வெறுப்பு, பெருமை, பகை, பொறாமை, இறுமாப்பு, சினம், முதலிய திருடர்கள் மனிதர்களின் மூளைகளுக்குள் நுழைய மாட்டார்கள்; தர்மம், கருணை, சத்தியம், அன்பு, அறிவு, விவேகம் முதலிய தெய்வீக உடமைகள் தொல்லையில்லாமல் மனிதனிடம் பாதுகாப்பாக இருக்கும்.

**69. Uproot internal and external foes and uphold righteousness**

## உட்புற, வெளிப்புற பகைவர்களை வேருடன் பிடுங்கி தர்மத்தை நிலை நிறுத்துவீர்

போலீசும் ஆட்சியிலிருப்போரும் புறப்பகைவர்களை ஒடுக்குபவர்கள். அகப்பகைவர்களை ஒழிக்க அவர்களுக்கு அதிகாரம் கிடையாது; அது அவர்களால் செய்ய இயலாத செயல். அதற்குரிய அதிகாரிகள் அவர்கள் அல்லர். அகத்தில் இயங்கும் ஆறு பகைவர்களை (அரிஷத்வர்கா) நல்லோர்களின் போதனைகள், இறையன்பு, இறையறிவு, புனிதமான பெரியவர்களின் தொடர்பு மூலமே வேரறுக்க முடியும்.

திருடர்களை ஒடுக்க வேண்டிய போலீசும் அதிகாரிகளும் திருடர்களின் கைப்பாவையாக மாறினால் அத்தீயவர்களால் எத்தகைய துன்பம் நேருமோ அதைப்போலவே பெரிய சாதுக்கள் பிரம்ம தியானிகள் உலக நலனை நாடாமல் வழிதவறி, புலன் இன்பங்களுக்கு அடிமையாகி, புகழ் பெயருக்கு ஆசைப்பட்டாலும்

அத்தகைய துன்பம் நேரும். அப்போது உலகம் அறியாமை இருளில் மூழ்கிவிடும். தர்மம் அழிந்துவிடும். மேலே கூறியதைபோல இப்போது இரண்டுமே இருக்கின்றன. அதனால் துன்பமும், தினமும் அதிகரிக்கிறது.

இந்த இரு குழுக்களும் நடைமுறைகள் பற்றிய சரியான மனப்பான்மை பெற்று, அனைவரின் நலனையும் இதயத்தில் இருத்தி, எல்லாம் வல்ல இறைவனை உணரும்போதுதான் உலகம் முழுவதும் இன்பமும் அமைதியும் நிலவும். இவ்விரண்டும் மனிதனின் இரண்டு உலகங்களை ஆளும் இரு அச்சுகள். ஆன்மீகத்தில் மூத்தவர்கள் அக உலகை ஆள்பவர்கள், நிர்வாக அதிகாரிகள் வெளி உலகை ஆள்பவர்கள்

. இந்த இரண்டு குழுக்களும் இரு உலகங்களுக்கும் முறைப்படி செயல்பட்டு, வழிகாட்டினால் இரு உலகங்களும் மகிழ்ச்சி பொங்கும் வகையில் செயல்படும். எனவே இப்போதுள்ள படுபாதகத்துக்குரிய பழியை இரண்டுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட காலகட்டங்களில்தான் இறைவன் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்க அருள்பாலிக்கிறார். அறியாமையையும் அநீதியையும் ஒடுக்குகிறார். இதைத் தெளிவுபடுத்தவே இறைவன் கீதையில் பின்வருமாறு கூறினார்.

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லா நிர்பவதி பாரத**

**அப்யுத்தானம தர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்**

ஓ! பாரதா! எப்போதெல்லாம் தர்மம் தலைகுனிந்து அதர்மம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் என்னை நானே பிறப்பித்துக் கொள்கிறேன்.

**70, Pray to God for His Incarnation**

## அவதாரம் நிகழ்வதற்கு பிரார்த்தனை செய்

உண்மையைப் பேசுவதானால் அவதார புருஷர்கள் அவதரிப்பதற்குக்கூட வழிபாடுகள் எனும் மாபெரும் செயல்மூலம் அழைப்பு விடுத்தாக வேண்டும். வெளி உலகப் பிரஜைகள் ஏதாவது வசதி அல்லது உதவித் தேவைப்படின் ஆட்சி செய்வோரை அணுகித் தங்கள் கோரிக்கைகளை வைக்கின்றனர். அதைப்போலவே அகவுலகில் பக்தி, அறம், சாந்தி, சத்தியம் முதலியவற்றை அடைய முடியாத பெரியோர்களும், நல்லோர்களும் அவற்றை அடையும் ஆசையில் இறைவனைத் தமக்குள் வழிபடுகிறார்கள். அவர்களுடைய வழிபாடுகளைக் கவனிக்கும் இறைவன் உலகிற்கு வந்து அருள்மாரி பொழிகிறார். இது அனைவருக்கும் நன்றாகத் தெரிந்த உண்மை.

முனிவர்களின் வழிபாடுகளை ஏற்று ராமனும், கிருஷ்ணனும் வரவில்லையா? பலர் இதை ராமாயணம், பாரதத்தில் படித்திருக்கிறார்கள். அநீதியையும் சுய நலத்தையும் வேரறுத்து தர்மத்தை உலகில் போதிக்க யாராவது ஒருவரை அனும்பும்படி ராமகிருஷ்ணர் (தெய்வீகப் பிறப்புடையவராக இருந்த போதும்) ஏன் காளியிடம் வேண்டினார்? (தன்னால் உலகைத் திருத்த முடியாததால் தான்) அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்த அனைவருக்கும் இது தெரியும்.

எடுத்த காரியத்தை முடித்துக் காட்ட வழிபாடுகள் இப்படித் திரும்பத் திரும்பச் செய்யப்பட வேண்டும். யாரும் தனது முயற்சியால் இறைவன் வரவில்லையே என மனம் தளர்ந்து, வழிபாடுகள் செய்வதை விட்டுவிடக்கூடாது. வெளி உலகில் தன் காரியம் நிறைவேற மனிதன் எத்தனை முறை எழுதுகிறான்; எத்தனை முறை அலைகிறான். இத்தனை பாடுபட்டும் அது இறுதியில் பயன் தராமலும் போகலாம்!

ஆன்மீக உழைப்பிற்குரிய பயனை எப்படித் தெரிந்து கொள்வதென்று இப்போது பார்போம். இதை அறிந்து கொள்ள இயலாததாகையால் உலகம் மகிழ்ச்சியில் நிலைக்கும்வரை ஒருவர் வழிபட்டாக வேண்டும். உலக மகிழ்ச்சிக்குரிய அறிகுறிதான் இறைவனின் அவதாரம்; இதைப் புரிந்துகொண்டால் அதன்பின் அந்த அவதார புருஷரை உடனைடியாக எளிதில் அங்கீகரித்து விடலாம். அதன்பின் சத்யமதம், தயை மதம், ஞான மதம், ப்ரேமை மதம் முதலியவை வளர்ந்து வளம்பெறும். எனவே இவை ஆழமாக வேர்விடும் வரை மக்கள் தொடர்ந்து வழிபட வேண்டும். இது மக்களுடைய பொறுப்பு.

புனிதமான மனிதர்கள் அமைத்த சாலை அவ்வப்போது செப்பனிடப்பட வேண்டும். அச்சாலை வழியாகப் பயணம் செய்வோர், அல்லது நாங்கள்தான் அதற்குரிய அதிகாரிகள் எனக் கூறிக்கொள்வோர் அதைச் செப்பனிட வேண்டும்; போதம் அல்லது அறிவு புகட்டுதல் என்பது இதுதான்.

இப்படிப்பட்ட பழுதுபார்க்கும் பணிகளுக்காகத்தான் பகவான் அவ்வப்போது தனிமனிதர்களையும், முனிவர்களையும், தெய்வீகமானவர்களையும் அனுப்பி வைக்கிறார். கடந்த காலத்தில் தெய்வீக மனிதர்களால் திறந்து வைக்கப்பட்ட பாதை இவர்களின் நற்போதனைகளால் (சத்போதம்) மீண்டும் திருத்தமாகச் சீர்திருத்தப்படுகிறது. இப்படியாக சாதுக்களின் தேவைகளும் மகான்களின் போதனைகளும் இறைவனின் சங்கல்பமும் இணைந்து செயலாற்றும்போது அதன் பயனாக உலகுக்குரிய மகிழ்ச்சிக்கு உறுதி அளிக்கப்படுகிறது; அது ஒருபோதும் குறையாது.

நிம்மதியின்மை, அநீதி, ஒழுங்கின்மை, பொய்மை, முதலியன சாந்தி, சத்தியம், அன்பு, பரஸ்பர சேவை, முதலியனவாக மாற வேண்டுமென்று மனித சமுதாயம் முழுவதும் ஒரே நேரத்தில் வழிபட்டால் நிச்சயமாக அனைத்தும் மேம்படும்.

இப்போதைக்கு இதைத்தவிர வேறுவழியில்லை. கவலைப் படுவதால் பயனில்லை. மனம் தளர்வதற்கு இது தருணம் அல்ல. பலவீனமாக இருப்பதாக வாதிடுவதும், பலத்தை விரும்புவதும் மனிதனின் அடிப்படை இயல்புக்கு முரணானது. எனவே மனிதன் மற்ற வழிகளில் தேடுவதை விட்டுவிட்டு, வழிபாடு, பிறர் சேவை, பரஸ்பர அன்பு, மரியாதை முதலிய வழிகள் மூலம் முயல வேண்டும். கணமேனும் நீங்கள் தாமதிக்க வேண்டாம்; விரைவில் இன்பமும் திருப்தியும் அடைவீர்கள்.

**71. With faith in human divinity, service to mankind becomes service to God**

## மனிதனின் தெய்வத்துவத்தில் நம்பிக்கை கொண்டால், மனிதனுக்கு செய்யும் சேவை மகேசனுக்கு செய்யும் சேவையாக மலரும்

மக்கள்: சேவையே மகேசன் சேவையென்று (மானவ சேவா மாதவ சேவா) மக்கள் சொல்கிறார்கள். அந்த வாக்கியம் உண்மையானதுதான். மனித சேவை புனிதமானதாக இருப்பினும், அது மாபெரும் லட்சியத்துடன் ஒன்றாவிடின் அது எப்படிப்பட்ட மகத்தான சேவையாக இருப்பினும் மானிடம் அதனால் நன்மை பெறாது.

வெறுமனே சுலோகத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதால் மனிதனின் தெய்வீகத்தில் ஆழ்ந்த நம்பிக்கையில்லாமல் செய்யப்படும் சேவையால், பெயரும் புகழும் பெற வேண்டி, விளைவை எதிர்பார்த்து ஆற்றப்படும் வினையால் பயனில்லை; செயல் எப்படிப்பட்டதாக இருப்பினும் இடைவிடா இறை சிந்தனையைத் தோழமையாகக் கொண்டு, மனிதனின் அடிப்படையான தெய்வீகத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்தால்தான் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பது நியாயமாகும்.

மாதவனின் சிந்தனை இல்லாமல் மாதவ சேவை எப்படி உருவாகும்? இப்படிப் பேசுவதேல்லாம் வெறும் விளம்பரம்; அதை நான் ஏற்றுக் கொள்வதில்லை; அதற்கு பதிலாக இறைவனை இதயத்தில் இருத்தி, சத்திய வழியில் தர்மத்தின் அம்சங்களுக்கேற்ப எது செய்யப்படினும் அது மகேசன் சேவையாக கருதப்படும்; பெயர் புகழுக்காக விளைவை எதிர்பார்த்து ஆற்றப்படும் வினைகளை மாதவ சேவை என்று குறிப்பிட முடியாது.

உண்மையைச் சொல்வதானால் இடைவிடா இறை சிந்தனையில் மூழ்கியவர்கள் வேறு பணி எதையும் செய்யத் தேவையில்லை. அவர்களது வழிபாட்டுக்குரிய

விளைவே உலகைப் புனிதமாக்கிவிடும். ஆனால் அனைவரும் இப்படி ஈடுபட இயலாது; எனவே அந்நிலையை அடைவதற்கு ஆயத்தமாகும் வகையில் தங்கள் மனதைத் தூய்மை செய்து, ஆசைகளைக் குறைத்துக் கொள்ள முயலவேண்டும். இந்நிலையை அடைந்த சாதுக்கள் அனைத்தையும் அவர்களாகவே உணர்ந்து கொள்வார்கள்; மானவ சேவையே மாதவ சேவை எனும் நிலையை அவர்களைப் போல் மற்றவர்களால் உணர்ந்து கொள்ள இயலாது.

**72. Purify the mind by meditation and japa**

## தியானத்தாலும், ஜபத்தாலும் மனதை தூய்மைப்படுத்துவீர்

ஆனால் அமைதியாக உட்கார்ந்து கொள்வது என்று இதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. அவரவர் தலையெழுத்து, கடந்த கால வினைகள், அவரவர் செய்யும் சாதனை முதலியவற்றிற்கேற்ப அதற்குப் பொருள்படுத்த வேண்டும். அப்படி நிகழும்வரை தியானமும், ஜபமும் செய்யுங்கள். அவை மனதை உணர்வு அலைகளிலிருந்து விடுவிக்கும். தெய்வீகத்தை நிரப்பும். மற்றவர்களுக்கு நன்மை நல்கும் செயல்களைச் செய்யுங்கள்; உலக சேவைக்கு உங்கள் இதயத்தை அர்ப்பணியுங்கள். விளைவுகளைப் பொருட்படுத்தாதீர்கள். இப்படிச் செய்தால் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். இல்லையேல் உடல் செயலற்றுவிடலாம்; மனம் துருதுருவெனத் தன் போக்கில் செயல்படலாம். இப்படிப் பட்டவர்கள் ஒன்றையும் செய்யாவிடினும் கர்மத்துக்கு இரையாகி விடுவார்கள்! இறைச் சிந்தனையில் மனதை ஒருமைப்படுத்தி ஒருவர் சத்தியத்தைத் தேடுவாராகில் அவருடைய உடலும் புலன்களும் செயல்பட்ட போதும், அதுவே ஓர் உலக சேவையாக அமையும்; அவைகளால் அவர் பாதிக்கப்பட மாட்டார். அவர் கர்மம் செய்தாலும் கர்மம் செய்யாதவரே ஆவார். பகவத் கீதையின் போதனை இதில் புதைந்திருக்கிறது. புனித எண்ணங்களை மனதில் வளர்த்துக் கொள்ள முயலாத ஒருவரின் இதயம் தீமையும் கேடும் நிறைந்த விளை நிலம் (நரகம்) என்பது நிச்சயம். வீடுபேறு அடைய பாடுபடுவோர், மன ஒருமை நாடுவோர், உன்னத நிலைக்கு உயர விரும்புவோர் அனைவரும் இதை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆன்ம அறிவை அடைய ஜாதி அல்லது சந்யாசம் அல்லது சடங்குகள் அல்லது சாத்திர வித்தகம் முக்கியமல்ல. பிரம்ம தியானம் (நிஷ்டை) ஒன்றே முக்கியம். இதைத்தான் உபநிஷதங்களும் வலியுறுத்துகின்றன.

**நாஸ்ரமம் காரணம் முக்தேஹ், தர்சனானி நாகாரணம்;**
**ததைவ சர்வகர்மானி ஞானமேவ ஹி காரணம்**

வீடுபேற்றுக்கு ஞானம் ஒன்றே காரணம்; ஆஸ்ரமமோ தத்துவமோ அல்ல.

**73. Pray for the advent of divine personages**

**மஹான்களின் வருகைக்காக வழிபாடு செய்வீர்**

எங்கும் நிறைந்த இறைவனின் சிந்தனையில் தன்னை நிலைநிறுத்த காலம், இடம் எனும் எல்லை இல்லை. புனிதமான இடமென்றோ உரிய நேரமென்றோ இதற்குத் தனியாக எதுவுமில்லை. எங்கே மனம் இறைச் சிந்தனையில் மையம் கொள்கிறதோ அது தான் புனிதமான இடம்! எப்போதெல்லாம் அப்படி மையம் கொள்கிறதோ அது மங்கலமான நேரம்! அங்கே அப்போது ஒருவர் இறைவன் மீது தியானம் செய்ய வேண்டும்.

அதனால் அது ஏற்கனவே பின்வருமாறு அறிவிக்கப்பட்டது:”

**நா கால நியமே யாத்ரா, நா தேசஸ்ய ஸ்தலஸ்ய சா**
**ய ராஸ்ய ரமதே சித்தம், தத்ர த்யானே ன கேவலம்**

இறைவனை தியானிக்க குறிப்பிட்ட நேரம் அல்லது இடம் என்று இல்லை. எங்கே, எப்போது மனம் தியானிக்க விரும்புகிறதோ அவைதான் அதற்குரிய இடமும் காலமுமாகும்.

கட்டுப்பாடும், தூய இதயமும் படைத்தவர்களும், உலகின் பிரதிநிதிகளுமான ஆன்மாக்கள் மூலமாகத்தான் இவ்வுலகு வளம்பெறும். இந்த நிமிடத்திலிருந்தே அப்படிப்பட்ட மனிதர்கள் அவதரிக்க ஒவ்வொருவரும் வழிபட வேண்டும்; அப்படிப்பட்ட மஹான்களின் ஆசீர்வாதத்தைப் பெறும் தகுதியைப் பெற முயலவேண்டும்; அன்றைய துயரங்களை மறந்து, உலகின் நலன் மேம்பட பாடுபடவேண்டும்.